# வைரஸ்

நான் அலுவலகத்திலும் வீட்டிலும் அதிக நேரம் கணினி யில் (Computer) வேலை பார்ப்பது உண்டு....

அது இல்லண்ணா! அம்பேல்தான் அந்த நாள்...

அது எனக்கு மட்டும் அல்ல என்னைப்போல் எத்தனையோபேர்... சரிதானே

ஒரு நாள் என் கணினி பழுதானது.... ஆக டென்சன்.... உதவிக்கு ஒருவரை அழைத்தேன்..

அவர் வந்து பரிசோதித்து ஐயா உங்கள் சிஸ்டத்தில வைரஸ் ஏறிவிட்டது என்றார்..

உண்மையிலே எனக்கு சிரிக்கவா அழவா என்று தெரியல. ஒருவேளை என் பிள்ளைகள் பக்கத்தில் இருந்திருப்பார்களானால் டாடி என்ன ஐஸ் கிரீம் ஒன்றும் அதற்கு தரவில்லையே என்று சொல்லிருப்பார்கள்... அவரும் சிரித்து மகிழ்ந்திருந்திருப்பார்..

அப்பொழுது அவர் சொன்னார் ஐயா, ஆன்டி வைரஸ் சாப்ட்வேர் போட்டால்தான் உங்க கணினியை பாதுகாக்க முடியும் என்றார்...

ஏற்கனவே இந்த விஷயத்தை கேள்விபட்டிருந்தபடியால் நானும் சரி என்றேன்...

ஆனால் அவர்... ஐயா அதற்கு முன்னாடி சிஸ்டத்தை ஃபார்மேட் செய்யவேண்டும் இல்லை என்றால் மீண்டும் மீண்டும் இந்த பிரச்னை வரும் என்றார்.

எனக்கு கணினியைப்பற்றி அதிகமாக தெரியாத படியினால் நண்பர்களை தொலைபேசியில் விசாரித்தேன் அவர்களும் அதை சொல்ல, அவரிடம் வேலையை ஒப்படைத்தேன்...

வேலையைமுடித்து அவர் பணத்தை வாங்கிகொண்டு சென்று விட்டார்.. அப்புறம் தான் என் மனதில் அது ரீங்காரம் போட்டது

இந்த வைரஸோட குணம்.........

என்னுடைய சிஸ்டம் மிகவும் மந்தமாகிவிடும்

அடிக்கடி வேலை செய்யாமல் ஆப் ஆகிடும்..

இப்படி சில மனுஷர்களையும் நான் பாத்திருக்கிறேன்.. இப்பொழுதுதான் புரிகிறது.. ஏதோ வைரஸ்னால பாதிக்கப்பட்டிருப்பாங்க போலும்

ஒரு மனுஷனுக்கு வியாதி வந்தா ஆன்டிபயாட்டிக் கொடுத்து அந்த வைரசை கொல்லுவாங்க... சில வைரஸ்கள் தாக்காமலிருக்க சின்ன குழந்தையிலேயே தடுப்பூசி போட்டு அந்த வியாதியே வராம காப்பாங்க....

அப்படினா நம்ம ஆத்துமாவையம் நாம் கறை படியாம பாது காக்க முடியும்... அந்த கறைகளை ஃபார்மேட் பண்ணவும் முடியும் என்று தோன்றினது....

நம்முடைய பரிசுத்த வேதாகமம் என்ன சொல்லுகிறது

மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமா விற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே லேவி 17:11

ஆமா... முதலாவது இரத்தம்தான் நம்முடைய பாவங் களை கழுவி நம்மை பரிசுத்தமாக்கும்.. இது எல்லா மதங்களும் ஏற்றுக்கொள்கிற ஒரு பொது உண்மை.

ஆகவேதான் நம்முடைய பாவங்களுக்காக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் பிறக்கும்பொழுது அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் மத் 1:21 என பார்க்கிறோம் அவர் ஒரு தேவ ஆட்டுக்குட்டியாக இந்த உலகத்திற்கு வந்து நமக்காக சிலுவையில் பலியானார்.. அவராலே நாம் பரிசுத்தமாக்கப் படுகிறோம்.

பரிசுத்தமாக்கப்பட்ட பின்பு மீண்டும் அந்த வைரஸால் பாதிக்கப்படாமலிருக்க பரிசுத்த வேதாகமத்தை தியானித்து அந்த வசனங்களை நம்முடைய இருதயத்தில் வைத்து ஆவியானவரோடு இசைந்து கீழ்படியும்போது பரிசுத்தமாக வாழலாம்.

வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுவதினால்தானே சங் 119:9

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக